## அத்தியாயம் 11

# வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை

### முன்னுரை

வேளாண்மைத் துறையின் வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு ‘சந்தைச் செயல்பாடு’ மிகவும் அவசியமாகிறது. விவசாயிகள் தங்களது விளைபொருட்களை நியாயமான விலையில் சந்தைப்படுத்திடவும், உரிய ஆதாய விலையினை பெற உறுதிப்படுத்துவதும் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் முதன்மையான நோக்கம் ஆகும். இதற்கென இயற்றப்பட்ட சட்டத்தை முறையாக செயல்படுத்தி புதிய தொழில் நுட்ப உத்திகளை பயன்படுத்துவதன் மூலம் அறுவடைக்கு பின் ஏற்படும் சேதாரங்களை குறைப்பதுடன், நல்ல விலை கிடைக்க தரம் பிரித்தல், மதிப்புக் கூட்டுதல், சிப்பம் கட்டுதல், பதப்படுத்துதல், போக்குவரத்து ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்வதே இத்துறையின் குறிக்கோளாகும்.

பல முன்னோடி நடவடிக்கைகள் பசுமைப் புரட்சி மூலம் எடுக்கப்பட்டதால் உணவு தானிய உற்பத்தியை அதிகரித்து தன்னிறைவு அடைந்த போதிலும், விவசாயிகள், தங்களது விளைபொருட்களை சந்தைப்படுத்துதலில் போதிய முன்னேற்றத்தை எட்ட இயலவில்லை. கிராமங்களின் வளர்ச்சியிலும், நாட்டின் கிராமப் பொருளாதார முன்னேற்றத்தை விரைவு படுத்துவதிலும், வேளாண்விற்பனை உட்கட்டமைப்புகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. விவசாயத்தின் செயல்திறன் மேம்படுவதற்கு உற்பத்தி எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு விற்பனையும் முக்கியமான அம்சமாகும். வேளாண்மை வணிகம் என்பது ஒரு விளைபொருளை உற்பத்தி செய்திட முடிவெடுக்கும் போதே தொடங்குகிறது.

வேளாண் விற்பனையை ஒழுங்குபடுத்தும் நோக்குடன், தமிழ்நாட்டில் வேளாண் விற்பனைத்துறை 1977 முதல் தனித் துறையாகச் செயல்பட்டு வருகின்றது. வேளாண் விளைபொருட்கள் விற்பனையை முறைப்படுத்துவதோடு மட்டுமன்றி வேளாண் ஏற்றமதி, அறுவடைக்குப்பின் பராமரிப்பு மற்றும் உணவு பதப்படுத்துதல் ஆகிய வேளாண் வணிக செயல்பாடுகளில் கவனம் செலுத்திட 2001ஆம் ஆண்டு முதல் “வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை” என பெயர் மாற்றம் செய்யப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது. வியாபாரிகளிடமிருந்து ஒரு சதவீதம் விற்பனைக் கட்டணம்

வசூலிக்கப்பட்டு விற்பனைக் குழுக்களின் வரவினமாக பெற்று வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வேளாண் மற்றும் வேளாண் பொருட்களை பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கான தொழில் கொள்கை–2007, வேளாண் விளை பொருட்களுக்கு உயர்ந்த பட்ச மதிப்புக் கூட்டுவதையும் வேளாண் உற்பத்தியாளர்களுக்கு கிடைக்கும் பயனை அதிகரிப்பதையும், முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

**வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் முக்கியச் செயல்பாடுகள்:**

1. விவசாயிகள் மற்றும் நுகர்வோர் நேரடியாக முழுமையான அளவில் பயன்பெறும் வகையில் உழவர் சந்தைகளை ஏற்படுத்தி செயல்படுத்துதல்.
2. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நிறுவி வேளாண் விளைபொருட்களுக்கு உரிய விலை பெற்று, விவசாயிகள் பயன்பெறும் வகையில் விற்பனையை முறைப்படுத்துதல்.
3. விவசாயிகள் தங்களது விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் மூலமாக தரம் பிரிப்பது, விற்பனை செய்வது, மதிப்புக்கூட்டுதல், பதப்படுத்துவது ஆகியவற்றினால் அடையும் பயன்களைப்பற்றி ஊடகங்கள் மூலம் விளம்பரம் செய்தல் மற்றும் விவசாயிகளுக்கு அதற்கான பயிற்சிகள் அளித்து அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
4. வேளாண் பொருட்கள், கால்நடைகள் மூலம் கிடைக்கும் பொருட்கள் மற்றும் வனப்பொருட்கள் ஆகியவற்றிற்கு நுகர்வோர் பயன்பெறும் வகையில் ‘அக்மார்க்’ தர முத்திரை வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துதல்.
5. வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை அமைப்பதன் மூலம் ஏற்றுமதி செய்யும் வேளாண் விளைபொருட்களின் உற்பத்தி பரப்பினை அதிகரித்தல், அறுவடைக்குப்பிந்தைய செய்நேர்த்தி குறித்த விவரங்களை அளித்தல், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் சர்வதேசச் சந்தை நிலவரம், ஏற்றுமதி வாய்ப்புகள் விவரத்தை அவ்வப்போது

ஒருங்கிணைத்து அளித்தல். அன்றாடம் அந்தந்த மாவட்டங்களில் நிலவும் சந்தை விலை நிலவரங்களை ஊடகங்கள், இணையதளம் மூலம் விவசாயிகள் அறிய விளம்பரம் செய்தல்.

6. உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் நிறுவி உணவுப் பொருள் இழப்பை குறைக்கவும், வேலை வாய்ப்பை பெருக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளுதல்.

**உழவர் சந்தைகள்**

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகள் மற்றும் பழங்களுக்கு உரிய விலை கிடைக்கவும், இடைத்தரகர் குறுக்கீடின்றி அதனை உரிய விலையில் நுகர்வோர் வாங்கி பயன்பெறவும் உருவாக்கப்பட்ட உன்னத திட்டம்தான் உழவர் சந்தை திட்டமாகும். இத்திட்டத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 14.11.1999ல் முதலாவது உழவர் சந்தை மதுரையில் துவக்கி வைக்கப்பட்டது. ஓராண்டு காலத்தில் 103 உழவர் சந்தைகள் அமைக்கப்பட்டன.

103 உழவர் சந்தைகளுக்கு பொதுமக்கள் அளிக்கும் வரவேற்பின் அடிப்படையிலும், மக்களின் பேராதரவுடனும் 2007–08ஆம் ஆண்டு புதியதாக 50 உழவர் சந்தைகள் ரூ. 11.25 கோடி செலவில் அமைக்க அறிவிக்கப்பட்டது. அவற்றில், 38 புதிய உழவர் சந்தைகள் திறக்கப்பட்டு தற்சமயம் 141 உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. 6 புதிய உழவர் சந்தைகளின் கட்டுமானப்பணி முடிவுற்று, திறக்கப்பட உள்ளது. மீதமுள்ள 6 புதிய உழவர் சந்தைகளில் 4 இடங்களில் கட்டுமானப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது, 2 இடங்களுக்கு இடத்தேர்வு நடைபெறுகிறது. இதுவரை 25 உழவர் சந்தைகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. தினமும் 15 டன்களுக்கு மேல் காய்கறிகள், பழங்கள் விற்பனை ஆகும் 22 முன்னோடி உழவர் சந்தைகளில் காய்கறிகள் மற்றும் பழங்களை பாதுகாக்க குளிர்பதன வசதிகள் (2 மெ.டன் கொள்ளளவு) ரூ.133.10 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

2008–09ஆம் ஆண்டில் சராசரியாக நாளொன்றிற்கு ரூபாய் 191.77 இலட்சம் மதிப்பிலான 1609 மெட்ரிக் டன் காய்கறி மற்றும் பழங்கள் 7526 விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டது. இதன் மூலம் தினந்தோறும் சுமார் 2,71,685 நுகர்வோர்கள் பயன்பெற்றனர். மாவட்ட வாரியாக உழவர் சந்தைகளின் விவரம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**விற்பனைக் குழுக்கள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்**

தமிழ்நாட்டில் 21 விற்பனை குழுக்கள், சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இந்த விற்பனைக்குழுக்கள் நியமனம் செய்யப்பட்ட உறுபினர்களுடனும் மற்றும் அவர்களால் தேர்தெடுக்கப்பட்ட தலைவரைக் கொண்டும் செயல்பட்டு வருகின்றன. விற்பனைக்குழுக்களின் கட்டுப்பாட்டில் 277 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் 144 ஊரகக் கிட்டங்கிகள் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகள் மற்றும் வியாபாரிகளை ஒரு சேர விற்பனைக் கூட வளாகத்தில் கூட்டி விளைபொருள் விற்கும் செயல்களை முறைப்படுத்தி, மறைமுக ஏல முறையில் போட்டி விற்பனையை ஏற்படுத்தி அதிகபட்ச விலை பெற்றுத் தருவது, இலவச தரம் பிரித்தலை விவசாயிகள் அறிந்து கொண்டு தரத்திற்கேற்ற விலை கிடைப்பதை அவர்களுக்கு உறுதி செய்வது போன்ற பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஆற்றப்படும் பணிகளுக்காக விவசாயிகளிடம் எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. விற்பனை செய்யப்பட்ட விளைபொருள் மதிப்பில் ஒரு விழுக்காடு மட்டும் விற்பனைக் கட்டணமாக வணிகர்களிடம் வசூலிக்கப்படுகிறது. வணிகர்கள் மற்றும் எடையாளர்களிடமிருந்தும் உரிமக் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. விற்பனைக்குழுக்களின் கீழ் செயல்பட்டு வந்த 15 சோதனைச் சாவடிகள் கலைக்கப்பட்டன. விற்பனைக்குழு வாரியான ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் ஊரக கிட்டங்கிகள் விவரம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் மின்னணு எடை மேடை மற்றும் எடை தராசு கொண்டு சரியான எடையிடுதல் வசதி, கிட்டங்கி வசதி, ஏலம் முடிந்தவுடன் உடனடியாக பணம் வழங்கல், அன்றாட அங்காடி விலை நிலவரம் அறிய வாய்ப்பு, விவசாயி களுக்கு ஓய்வறை வசதி, குடிநீர் வசதி, வண்டி மாடுகள் நிறுத்துவதற்கு இட வசதி, இலவச மருத்துவ வசதி, இடுபொருள் மையம், தொலைபேசி மற்றும் நிகரி வசதி போன்ற பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

நடுவண் அரசின் அக்மார்க்நெட் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 184 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களிலும், 21 விற்பனைக்குழுவிலும் இணையதள வசதியுடன் கூடிய கணினி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒழுங்குமுறை

விற்பனைக்கூடங்களில் விவசாய விளைப்பொருட்களுக்கு நிலவும் அன்றாட விலை விவரத்தை தேசிய தகவல் மையத்திற்கு அனுப்பப்படுவதன் மூலம் விவசாயிகள் விளைப்பொருட்களுக்கு பல்வேறு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் நிலவும் விலை விவரத்தை அறிய வசதிகள் செய்யப்பட்டு விவசாயிகள் விளைபொருட்களை எந்த காலத்தில் விற்பனை செய்யலாம் என முடிவெடுக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. 2008–09ஆம் நிதியாண்டில் இத்துறையின் தீவிர பிரச்சாரம் மற்றும் விளம்பரம் மூலமாக ரூ.6427 கோடி மதிப்பிலான 17.73 இலட்சம் மெ.டன் விளைபொருட்கள் விவசாயிகளால் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் 2008–09ஆம் ஆண்டில் விற்பனைக்குழுக்களால் ரூ.64.27 கோடி விற்பனை கட்டணம் வசூல் செய்யப்பட்டு வரவினமாக கிடைக்கப் பெற்றுள்ளது. இதுவரை வசூல் செய்யப்பட்ட தொகையில் இதுவே மிக கூடுதலான தொகையாகும். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனைக் குழு வாரியான உட்கட்டமைப்பு வசதிகளின் விவரங்கள் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**ஒரே சீரான அறிவிக்கை செய்தல்**

இதுவரை 40 வேளாண் விளைபொருட்கள் விற்பனைக் குழுக்கள்/ விற்பனைக் கூடங்களின் எல்லையை கருத்தில் கொண்டு அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. மாநில முழுமைக்கும் விளைபொருட்களை ஒரே சீரான அறிவிக்கை செய்ய முதல் நிலை அறிவிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளது. இது மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. விற்பனைக் கட்டணம் வியாபாரிகளிடம் இருந்துதான் வசூலிக்கப்படுகிறது. விவசாயிகளி டமிருந்து எவ்வித கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. இந்த விற்பனைக் கட்டணத்தை கொண்டுதான் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மேம்பாட்டுப் பணிகள் செய்து தரப்படுகின்றது.

**பொருளீட்டுக் கடன்**

அறுவடை காலங்களில் ஏற்படும் விலை வீழ்ச்சியினால், சிறு/குறு விவசாயிகள் குறைந்த விலையில் விளைபொருட்களை விற்பனை செய்வதை தவிர்க்க ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பொருளீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைக் கிட்டங்கிகளில் 6 மாதம் வரை கட்டணம் ஏதுமின்றி

இருப்பு வைக்கலாம். விளைபொருளின் மொத்த மதிப்பில் 75 விழுக்காடு வரை பொருளீட்டுக் கடனாக, அதிகபட்சமாக ரூ.1,00,000/– வரை ஒவ்வொரு விவசாயியும் பெறலாம். அதேபோன்று வியாபாரிகளுக்கும் பொருளீட்டுக் கடன் வசதி செய்து தரப்பட்டுள்ளது. இப்பொருளீட்டுக் கடனுக்காக தற்சமயம் விவசாயிகளிடமிருந்து 5 விழுக்காடும் வியாபாரிகளிடமிருந்து 9 விழுக்காடும் வட்டியாக வசூலிக்கப்படுகிறது. 2008–09ஆம் நிதியாண்டில் 2611 விவசாயிகளுக்கு ரூ.1670.48 இலட்சமும், 172 வியாபாரிகளுக்கு ரூ.554.55 இலட்சமும் பொருளீட்டுக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ் நாடு உழவர் நல நிதித் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், ஆண்டுதோறும் 1 மெட்ரிக் டன் அல்லது அதற்குமேல் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்யும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள் பெயர் பதிவு செய்யப்பட்டு, விபத்தின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ / நிரந்தர ஊனமுற்றாலோ அல்லது விஷப்பாம்பு கடியின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ அவர்களுக்கு ரூ.1,00,000/– வரை உதவித்தொகை வழங்கப்படும். அதேபோன்று, விபத்தின் காரணமாக இரண்டு கைகள் அல்லது கால்கள் அல்லது கண்கள் இழக்க நேரிட்டால் ரூ.75,000/– உதவித்தொகையும் மற்றும் விபத்தின் காரணமாக ஒரு கை அல்லது கால் அல்லது கண் இழக்க நேரிட்டால் மற்றும் இடுப்பு ஊனமுற்றால் ரூ.50,000/– உதவித்தொகையும், தகுதியுடைய விவசாயிகள்/ குத்தகைதாரர் களுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தில் விவசாயிகள் பயன்பெற உறுப்பினர் கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. வருடத்திற்கு உறுப்பினர் கட்டணமான ரூ.10/– (ரூபாய் பத்து மட்டும்) சம்பந்தப்பட்ட விற்பனைக்குழுவும், தமிழ் நாடு மாநில வேளாண் விற்பனை வாரியமும் சம பங்காக ஏற்கின்றன.

**கிராமங்களில் உலர் களங்கள் அமைத்தல்**

தானிய விளைபொருட்களில் அறுவடைக்குப் பின் 5 முதல் 10 விழுக்காடு சேதமாகிறது. அறுவடைக்குப்பின் தானிய இழப்பினைக் குறைக்கும் வகையில் இத் துறையின் மூலமாகக் கிராமங்களில் 1997ஆம் ஆண்டு முதல் உலர் களங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு மிகவும் பயனளிக்கும் திட்டத்தில்

இது வரை ரூ.23.20 கோடி செலவில் 1228 உலர்களங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2007–08ஆம் நிதியாண்டில் ரூ.2.50 கோடி செலவில் 100 உலர்களங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு இதுவரை 82 உலர்களங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 18 இடங்களில் கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகிறது.

**நெல் வணிக வளாகம்**

மதுரையில் நெல்லுக்கென ஒரு வணிக வளாகம் ரூ.17.59 கோடி செலவில் கட்டப்பட்டு, வியாபாரிகளால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2008–09ஆம் நிதியாண்டில் இவ்வணிக வளாகத்தின் மூலம் மதுரை விற்பனைக்குழுவில் ரூ.23 இலட்சம் வரவினமாக வசூலிக்கப் பட்டுள்ளது.

**வேளாண் விளைபொருள் பேரங்காடி**

விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பயன்பெறும் வகையில் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் காய்கறிகள் மற்றும் பழங்களுக்கென ரூ.3.08 கோடி செலவில் வேளாண் விளைபொருள் பேரங்காடி 50 கடைகள், 216 தரை வாடகை கடைகள், தரம்பிரிப்பு அறை, வர்த்தக அறை போன்ற வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிலுள்ளது.

**விற்பனை முனையங்கள் ஏற்படுத்துதல்**

நடுவண் அரசின் நெறிமுறைப்படி அழுகும் பொருட்களான காய்கறிகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றை பதப்படுத்தி விற்பனை செய்திட அனைத்து வசதிகளுடன் கூடிய விற்பனை முனையங்கள் (Terminal Markets) சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மூன்று பெரு நகரங்களின் அருகில் ரூ.200 கோடி செலவில் ஏற்படுத்தப்பட உள்ளது. விற்பனை முனையங்கள் அமைக்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்காக கலந்தறிதற்குரியர் (Consultant) நிறுவனங்களான திருவாளர்கள். தராஷா அண்டு கம்பெனி, மும்பை மற்றும் இட்காட் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு திருவாளர்கள். ராம்கி இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிட்., – ஜெயின் இரிகேஷன் சிஸ்டம்ஸ் லிட். ஹைதராபாத் (நட்பமைப்பு) மற்றும் திருவாளர்கள். சுபாஷ் ப்ராஜெக்ட் மற்றும் மார்க்கெட்டிங் லிட்., பெங்களூரு – எல்.எம்.ஜே. இன்டர்நேஷனல் லிட்., புதுடெல்லி (நட்பமைப்பு) தேர்வு செய்யப்பட்டு உள்ளனர். மைய அரசு இத்திட்டத்தினை சமபங்கு வீதத்தில் அல்லாமல் மானிய அடிப்படையில் செயல்படுத்தும்படி அறிவுறுத்தியுள்ளது.

இதற்கான திருந்திய வழிகாட்டுதல்களின் இறுதி வடிவாக்கப் பணி மைய அரசின் தீவிர நடவடிக்கையில் உள்ளது. மைய அரசின் வழிகாட்டுதல்கள் கிடைக்கப் பெற்றவுடன், தகுதியுடைய நிறுவனங்களிடமிருந்து பிரேரணை கோரும் விண்ணப்பம் மற்றும் தொடர்புடைய பிற ஆவணங்களும் கோரப்பட உள்ளது.

**வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் அளித்தல்.**

வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதில் சந்தையறிவுத் திறம் முக்கியப் பங்கினை வகிக்கின்றது. விவசாயிகள் பல்வேறு சந்தைகளில் வேளாண் விளைபொருட்களுக்கு நிலவும் விலை விவரத்தினை அறிவதன் மூலம் அவர்களின் விளைபொருட்களுக்குக் கூடுதல் விலை பெற ஏதுவாகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு, அனைத்து வசதிகளுடன் கூடிய வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையங்கள் முதற்கட்டமாக 14 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையங்களில் இணையதளம் வசதியுடன் கூடிய கணினி மற்றும் மின்னணு தகவல் பலகை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மையங்களில் கணினி மூலமாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வரப்பெற்ற விளைபொருட்களின் வரத்து மற்றும் அவற்றிற்கு நிலவும் விலை நிலவரம் மற்றும் அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்து மின்னணு தகவல் பலகையில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒளிபரப்பு செய்யப்படுகிறது. இத்துடன் தற்போது இத்துறையின் வலைதளத்தின் மூலம் உழவர் சந்தை மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நிலவும் தினசரி விலை மற்றும் வரத்து விவரங்களை விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில் கணினி மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

**ஓசூரில் கொய் மலர்களுக்கென வேளாண் ஏற்றுமதி மண்டலம்.**

தமிழ்நாட்டில் கொய் மலருக்கென ஏற்றுமதி மண்டலம் அமைப்பது குறித்த நடுவண் அரசின் நிறுவனமான வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள் எற்றுமதி மேம்பாட்டு முகைமை (APEDA)– வுடன் செயலாக்க ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இதற்கென ஒசூரில் 198.73 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.24.85 கோடி மதிப்பீட்டில் டிட்கோ நிறுவனமும் தனியார் நிறுவனமும் இணைந்து எற்படுத்தியுள்ள

**டான்ஃப்ளோரா** என்ற கூட்டு நிறுவனம் தரம்பிரித்தல், சிப்பம் கட்டுதல் உள்ளடக்கிய மத்திய சிப்பம் கட்டும் கூடம் (Central Pack House), குளிரூட்டும் நிலையம் (Cold Storage), விற்பனை வசதி ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி உள்ளது. இந்த ஏற்றுமதி மண்டலத்திலிருந்து 2008–09ஆம் நிதியாண்டில் ரூ.7.27 கோடி அளவிற்கு டான்ஃப்ளோரா நிறுவனத்தினரால் வர்த்தகம் செய்யப்பட்டு லாபகரமாக செயல்பட்டு வருகிறது.

**நீலகிரி மாவட்டத்தில் மலர்களுக்கென வேளாண் ஏற்றுமதி மண்டலம்.**

நீலகிரி மாவட்டம் உதகையில் மலர்களுக்கென ரூ.15.89 கோடி மதிப்பீட்டில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் தனியார் உதவியுடன் அமைக்கப்பட்டு வருகிறது. இம்மண்டலம் அமைப்பது குறித்து மைய அரசின் நிறுவனமான வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள் எற்றுமதி மேம்பாட்டு முகைமை (APEDA)-யுடன் செயலாக்க ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இந்த ஏற்றுமதி மண்டலத்தில் முதல்கட்டமாக ஏல மையம், தாய்க்கன்று நாற்றங்கால், முன்குளிர்விப்பான், குளிர் பதனக் கிட்டங்கிகள், நவீன மலர் சாகுபடி பயிற்சி மையம், விற்பனை வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் உதகையில் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக கோத்தகிரியில் கொள்முதல் நிலையம், தரம் பிரிப்பு மற்றும் சிப்பம் கட்டுதல், குளிர்பதன கிட்டங்கி, வேளாண் ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளது. உதகையில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலமாக விவசாயிகளுக்கு நவீன மலர் சாகுபடிக்கான தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், மலர்கள் சாகுபடிக்கு தேவையான தொழில் நுட்ப விவரம் குறித்த விவரங்களை விவசாயிகள் அறிய ஏதுவாக தகவல் மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மின்னணு மலர் ஏல மையம் (Electronic Flower auction centre) ரூ.11 இலட்சம் செலவில் அமைக்கப் பட்டுள்ளது. இந்த ஏற்றுமதி மண்டலத்திலிருந்து 2008–09ஆம் நிதியாண்டில் ரூ.1.91 கோடி மதிப்புள்ள மலர்கள் திருவாளர்கள். நீல்புளோரா நிறுவனத்தால் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளது.

**கடலூர் மாவட்டத்தில் முந்திரிக்கென ஏற்றுமதி மண்டலம்.**

முந்திரிக்கென கடலூர் மாவட்டத்தில் ரூ.17 கோடி மதிப்பீட்டில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான செயலாக்க ஒப்பந்தம் அபிடாவுடன் மேற்கொள்ளப்பட்டு முந்திரி ஏற்றுமதி மண்டலம் அமைக்க தனியார் நிறுவனம் பங்கேற்கும் வகையில் சத்துவா அக்ரோ எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இம்மண்டலத்தில் பொதுவான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட சத்துவா ஏற்றுமதி நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு, அந்நிறுவனத்தால் விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிக்கப்பட்டு டிட்கோ நிறுவனத்திடம் அளிக்கப்பட்டது. இம்மண்டலத்திற்கென மத்திய அரசின் வணிக அமைச்சகத்தின் ASIDE (Assistance for Development of Export Infrastructure and Allied Activities) நிதி மூலமாக ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்து டிட்கோவிற்கு விடுவிக்கப் பட்டுள்ளது. அதிலிருந்து, சத்துவா நிறுவனத்திற்கு இதுவரை ரூ.2 கோடி விடுவிக்கப் பட்டுள்ளது.

மாநில அரசின் முதற்கட்ட பங்குத் தொகையான ரூ.49 இலட்சம் டிட்கோ நிறுவனத்தால் சத்துவா ஏற்றுமதி நிறுவனத்திற்கு வழங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் 2006–07ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு பொது உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விவசாயிகளின் நலனுக்கென நாற்றங்கால் அமைத்து தரமான முந்திரி கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பதப்படுத்தும் நிலையம் அமைக்கப்பட்டு பதனிடுதல் நடைபெற்று வருகிறது. பொதுவான பதனிடுதல் மற்றும் சிப்பம் கட்டும் பணிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் முடிவடைந்துள்ளது. இந்நிறுவனம் 120 விவசாயிகளிடம் ஒப்பந்தப்பண்ணையம் மூலம் முந்திரி கொள்முதல் செய்ய ஆய்வு நடத்தி உள்ளது. காந்தி ஊரக கல்வி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இயற்கை வழி விவசாயம் செய்யும் 8 சுய உதவிக்குழுக்கள், ஐந்து கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்றுமதி மண்டலத்திலிருந்து 2008–09ஆம் நிதியாண்டில் ரூ.2.80 கோடி மதிப்பிற்கு சத்துவா ஏற்றுமதி நிறுவனத்தால் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளது.

**மலர் ஏல மையம்**

விவசாயிகள் மற்றும் வியாபாரிகளின் நலனுக்கென திருநெல்வேலி மாவட்டம், காவல் கிணறில் ரூ.163.40 இலட்சம் செலவில் மலர் ஏல மையம் ஒன்று அமைக்க திட்டமிடப்பட்டு, கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றது.

**குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகங்கள்**

விவசாயிகள் பயன்பெறும் வகையில் கோயம்புத்தூர் மாவட்டம் பொங்கலூரில் வெங்காயத்திற்கும், கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் தக்காளிக்கும், கிருஷ்ணகிரியில் மாங்கனிக்கும், தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில் தேங்காய்க்கும் மற்றும் தேனி மாவட்டம் ஓடைப்பட்டியில் திராட்சைக்கும் குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகங்கள் அமைக்க தனியார் நிறுவனங்கள் எவரும் முன்வராதால் விற்பனைக்குழுவின் நிதியிலிருந்து தலா ரூ.1 கோடி செலவில் அமைக்கப்படவுள்ளது. இந்நிதியின் மூலம் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு சம்பந்தப்பட்ட விற்பனைக் குழுக்களால் மேற்கொள்ளப் படும்.

**வேளாண் மற்றும் வேளாண் பொருட்கள் பதப்படுத்தும் தொழில் கொள்கை**

வேளாண் தொழிலுக்கான ஆதரவானது, வேளாண் விளை பொருட்களுக்கு உயர்ந்த பட்ச மதிப்புக் கூட்டுவதையும் வேளாண் உற்பத்தியாளர்களுக்கு கிடைக்கும் பயனை அதிகரிப்பதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கும்.

தமிழ்நாட்டிலுள்ள வேளாண் மற்றும் வேளாண் பொருட்கள் பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கான கொள்கையின்படி வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஒற்றைச்சாளர முகமையாக செயல்பட்டு வருகிறது. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையில் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டு பிரிவு தொடங்கப்பட உள்ளது.

மஞ்சள் (ஈரோடு), ஜவ்வரிசி (சேலம்), வாழைப்பழம் (திருச்சி), மாம்பழம் (கிருஷ்ணகிரி), முந்திரி (பண்ருட்டி), திராட்சை (தேனி) போன்றவற்றில் மதிப்பு கூட்ட இயலும் என்பதை கருத்தில் கொண்டு, தொழில் பூங்காக்களிலும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களிலும் வேளாண் விளைபொருள் பதப்படுத்தும் திரள் தொழில் அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

**ஊக்கச் சலுகைகள்**

- உற்பத்தித் தொழில்களுக்கு தொழில் கொள்கையின் கீழ் வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் வேளாண் தொழில்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் நுண்நீர் பாசனத்திற்கான வேளாண் சாதனங்கள் தயாரிப்புக்கும் வழங்கப்படும்.
- இந்திய அரசுத் திட்டங்களின் கீழ் உள்ள பயன்களை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவும், இந்திய அரசின் அத்தகைய நிதி உதவியை வேளாண் பிரிவுகள் அணுகிப் பெற ஏதுவாகவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- இந்திய அரசின் மானியங்களையும் தமிழக அரசின் மானியங்களையும் சேர்த்து திட்டச் செலவில் 50 சதவீதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என்பதற்கு உட்பட்டு, வேளாண் விளைபொருள் பதப்படுத்தும் பிரிவுக்கு இந்திய அரசு மூலம் கிடைக்கும் சலுகைகளுடன் மாநில கொள்கையின் கீழ் உள்ள அனைத்து சலுகைகளும் அளிக்கப்படும்.
- வேளாண் விளைபொருள் பதப்படுத்துவதற்காக தனிப்பட்ட முறையில் அமைக்கப்படும் சிறிய மற்றும் நடுத்தர குளிர்பதன சேமிப்பு நிலையங்களுக்கு, அவை செயல்படத் தொடங்கிய முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுகளில் முறையே 30 சதவீதம், 20 சதவீதம் மற்றும் 10 சதவீதம் மின் கட்டண மானியம் வழங்கப்படும்.

- வேளாண் விளைபொருள் பதப்படுத்தும் புதிய பிரிவுகள் அனைத்திற்கும் அவை வணிக ரீதியிலான உற்பத்தியை தொடங்கும் நாளிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு மின்சார வரி செலுத்துவதிலிருந்து 100 சதவீதம் விலக்கு அளிக்கப்படும்.

- ஏற்றுமதி செய்யும் பொருட்டு, எச்.ஏ.சி.சி.பி (HACCP) மற்றும் இதர காப்பு சம்பந்தப்பட்ட பன்னாட்டு சான்றுகளைப் பெறுவதற்காக, மாநில/மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட சான்றளிப்பு நிறுவனத்திலிருந்து தரச் சான்று குறியீடு பெறும் பொருட்டு, வேளாண் விளைபொருள் மற்றும் உணவுப் பொருட்களை பதப்படுத்தும் தொழிலில் ஈடுபடுகின்ற சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு அவை செய்யும் செலவில் 50 சதவீதம் – உச்சவரம்பாக ரூ.5 லட்சம் தொகை வழங்கப்படும்.
- அழுகக்கூடிய வேளாண் விளைபொருட்களை எடுத்துச் செல்லும் வாகனங்களில் ''பசுமைப் போக்குவரத்து'' என்ற பெயர் சீட்டு பொறிக்கப்பட்டு தணிக்கைச் சாவடிகளில் விரைவான அனுமதி வழங்கப்படும்.
- நுண்நீர் பாசனக் கருவிகளை அமைக்க முன்வரும் முதன்மை வேளாண் உற்பத்தியாளர்களுக்கு இலவச மின் இணைப்பு வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படும். சிறிய மற்றும் குறு விவசாயிகள் ஒரு குழுவாக இணைந்து 20 ஹெக்டேர் மற்றும் அதற்கு மேலாக ஒரு பகுதியை ஏற்படுத்தி நுண்நீர் பாசன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி பொதுவான பாசன வசதியை அமைத்து, சொந்தமாக்கி மேலாண்மை செய்தால் அத்தகைய சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இலவச மின்இணைப்பு வழங்குவதில் முதல் முன்னுரிமை வழங்கப்படும்.
- காட்டாமணக்கு மற்றும் பிற உயிரி–எரிபொருள்களுக்கான நடவு கன்றுகள் மற்றும் விதைகளுக்கு அரசு 50 சதவீதம் மானியம் வழங்குவது போல், உயிரி – எரிபொருள், பயோ–டீசல் உற்பத்தி செய்யும் ஆலைகளுக்கும் இம்மானியம் விரிவுபடுத்தப்படும்.
- காட்டாமணக்கு விதைக்கு கொள்முதல் வரியிலிருந்தும், காட்டாமணக்கு எண்ணெய்க்கு மதிப்பு கூட்டு வரியிலிருந்தும், வணிக ரீதியிலான உற்பத்தி தொடங்கிய நாளிலிருந்து 10 ஆண்டுகளுக்கு விலக்களிக்கப்படும்.

உணவு பதப்படுத்தும் தொழில் மூலம் பெருமளவில் உணவுப் பொருள் இழப்பு தவிர்க்கப்படுகிறது. விவசாயிகள் உணவு பதப்படுத்துதல் பற்றிய விவரம் அறிந்து அதற்கேற்ப உணவு பதப்படுத்தத்தக்க விளைபொருட்களை

விளைவிக்கும் போது கூடுதல் வருவாய் ஈட்ட வாய்ப்பு கிடைத்துள்ளது. உணவு பதப்படுத்தும் தொழில்கள் அதிகரிப்பதால் வேலை வாய்ப்பும் அதிகரிக்கின்றன. தற்சமயம் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, நடுவண் அரசின் உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகத்தின் மாநில முகமை நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது. தொழில் முனைவோர் பயிற்சி மற்றும் உணவு பதனிடும் பயிற்சி நிலையம் அமைக்க மானியம் கோரும் விண்ணப்பங்கள் மாநில முகமையான இவ்வலுவலகத்தில் பரிசீலனை செய்யப்பட்டு மைய அரசின் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகத்திற்கு பரிந்துரை செய்து அனுப்பப்படுகிறது.

**அக்மார்க் தரம் பிரித்தல்**

"அக்மார்க்" என்பது உணவுப்பண்டங்களின் தரத்திற்கு அளிக்கப்படும் முத்திரையாகும். இத்திட்டத்தின் மூலமாக நுகர்வோருக்குத் தரமான கலப்படமற்ற உணவுப் பொருட்களை கிடைக்கச் செய்வதற்கு தமிழ்நாட்டில் 30 மாநில அக்மார்க் ஆய்வகங்களும், சென்னையில் ஒரு முதன்மை ஆய்வகமும் செயல்பட்டு வருகின்றன. "அக்மார்க்" தரம் பிரிப்பின் கீழ் மத்திய தொகுப்பிற்கு உட்பட்ட உணவுப் பண்டங்கள் மற்றும் மத்திய தொகுப்பிற்கு உட்படாத உணவுப் பண்டங்களுக்கு தரம் பிரிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. சான்றிதழ் பெற்ற சிப்பம் கட்டுவோருக்கு உணவுப் பண்டங்களின் தரம் மற்றும் தன்மை அடிப்படையிலான "அக்மார்க்" முத்திரைச் சீட்டுகள் ஆய்வகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் மேற்பார்வையில் வழங்கப் படுகின்றன. 2008–09ஆம் ஆண்டில் 14.34 இலட்சம் குவிண்டால் உணவு பண்டங்கள் தரம்பிரிக்கப்பட்டன. மாவட்ட வாரியாக அக்மார்க் ஆய்வகங்களின் விவரம் அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ளது.

**நீர்வள நிலவளத் திட்டம்** (IAMWARM)

நீர்வள நிலவளத் திட்டம் உலக வங்கியின் நிதி உதவியுடன் தமிழ்நாட்டிலுள்ள **63** உபநீர் வடிநிலப்பகுதிகளில் **2007–08** முதல் **2012–13** வரை 6 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2008–09**ஆம் நிதியாண்டில் இரண்டாம் கட்டமாக **16** உபநீர் வடிநிலப்பகுதிகளிலும், முதல் கட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட **9** உபநீர் வடிநிலப்பகுதிகளின் **2**ம் ஆண்டு பணிகளையும் சேர்த்து மொத்தம் ரூ.**846.45** இலட்சம் செலவில் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. **2008–09**ஆம் ஆண்டில் 77 எண்கள் கட்டுமானப்பணிகள் கீழ்க்கண்டவாறு முடிக்கப்பட்டுள்ளன.

1. சேமிப்புக் கிட்டங்கி – 34

2. உலர்களம் – 35

3. வேளாண் வணிக மையம் – 4

4. கொள்முதல் மையம் – 3

5. சிப்பம் கட்டும் அறை – 1

மேற்கண்ட வளாகங்களை வேளாண் விளைபொருள் குழுக்களைச் சார்ந்த விவசாயிகள் முழுமையாக பயன்படுத்தி வருவதோடு, தங்கள் விளைபொருட்களுக்கு கூடுதல் வருவாயும் பெற்று வருகின்றனர். உபநீர் வடிநிலப்பகுதி விவசாயிகளுக்கு தகவல் மற்றும் பயிற்சி திட்டத்தில் கீழ்க்கண்டவாறு 105 பயிற்சிகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

1. அறுவடை பின்செய் நேர்த்தி பயிற்சிகள் – 25

2. உற்பத்தியாளர் – வியாபாரிகளின் கூட்டுப்பணிமனை – 25

3. பட்டறிவுப் பயணம் (மாநிலத்தின் உள்ளே) – 30 எண்கள்

4. பட்டறிவுப் பயணம் (மாநிலத்தின் வெளியே) – 25 எண்கள்.

மேலும், முதல் மற்றும் இரண்டாம் கட்ட உபநீர் வடிநிலப்பகுதிகளில் மொத்தம் 422 வேளாண் விளைபொருள் குழுக்கள் அமைக்கப்பட்டு இதுவரை 207 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**2009–10**ஆம் ஆண்டில் இத்திட்டம் **3**ஆம் கட்டமாக புதிதாக **38** உபநீர் வடிநிலப்பகுதிகளிலும், முதல் மற்றும் இரண்டாம் கட்டத்தைச் சார்ந்த உபநீர் வடிநிலப்பகுதிகளையும் சேர்த்து ரூ.410.58 லட்சம் செலவில் செயல்படுத்தப்பட உள்ளது.

**தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம்** (NADP)

விவசாயிகளின் சந்தை நுண்ணறிவை மேம்படுத்தும் பொருட்டு, 2008-09ல் துல்லிய பண்ணையத்தில் ஈடுபடும் விவசாயிகளை நவீன சந்தைகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச்செல்ல ரூ.66.48 இலட்சம் செலவிடப்பட்டது. மேலும், அறுவடைக்குப்பின் பராமரிப்பு கட்டுமானமாக வேளாண் விற்பனைத் துறை மூலம் தரம் பிரிக்கும் களம், புகைமூட்டும் நிலையம், காய்கறிகள் மற்றும் பழங்களை கழுவும் இயந்திரம் மற்றும் சேகரிப்பு வண்டி ஆகியவற்றை திண்டுக்கல் மாவட்டம் கவுஞ்சி கிராமத்தில் ரூ.92 இலட்சம் செலவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

**தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம்**

**1. பணியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பயிற்சி அளித்தல்**

சேலத்தை மையமாகக் கொண்டு மாநில வேளாண் விற்பனை வாரியத்தின் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. விற்பனைத் துறைப் பணியாளர்கள் மற்றும் விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்திடும் வகையில் பயிற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. இப்பயிற்சி மையத்தின் மூலம் தரம்பிரிப்பாளர் பயிற்சி, விற்பனைக்குழு பணியாளர்களுக்கான புத்தூட்டப் பயிற்சி, விவசாயிகள் நேரடித் தொடர்புத் திட்டம் மற்றும் வேளாண்மை விற்பனைத் துறை அலுவலர் மற்றும் செயலாளர்களுக்கான காரீப் மற்றும் ராபி பருவ பயிற்சிகள் என நான்கு வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இப்பயிற்சி மையத்திலிருந்து தரம்பிரிப்பாளர் பயிற்சி ஆண்டு ஒன்றுக்கு 2 அணிகள் வீதம் விற்பனைக்குழுவில் பணிபுரியும் பணியாளர் 40 நபர்களுக்கு 30 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதேபோன்று விற்பனைக்குழு பணியாளர்களுக்கான புத்தூட்டப் பயிற்சி ஆண்டு ஒன்றுக்கு 1 அணி வீதம் 20 நபர்களுக்கு 20 நாட்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், விவசாயி களுக்கான நேரடித் தொடர்புத் திட்டம் குறித்த பயிற்சி ஆண்டு ஒன்றுக்கு 5

அணிகளாக 1 அணிக்கு 20 விவசாயிகள் வீதம் மொத்தம் 100 விவசாயிகளுக்கு 3 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

2007–08 மற்றும் 2008–09ஆம் ஆண்டுகளில், அறுவடை தொழில் நுட்பம், மதிப்புக் கூட்டுதல், உணவு பதனிடுதல் மற்றும் பல இனங்களில் 10,010 விவசாயிகளுக்கு ரூ.52.50 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**2. கட்டுமானப் பணிகள்**

வாரியத்தின் பொறியியல் பிரிவு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் அடிப்படை வசதிகளான அலுவலகக் கட்டடங்கள், ஊரகக் கிட்டங்கிகள், ஏலக் கொட்டகைகள், வணிக வளாகங்கள், இடுபொருள் கடைகள், பணம் வழங்கல் அறைகள், ஓய்வறைகள், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள், உட்புறச் சாலை வசதிகள், அலுவலகத்துடன் இணைந்த கிட்டங்கிகள், சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அ) தமிழ்நாட்டில் விற்பனைக்குழுவிற்குட்பட்ட இடங்களில் ரூ.2.50 இலட்சம் வீதம் 100 இடங்களில் ரூ.2.50 கோடி செலவில் உலர்களங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ஆ) புதியதாக தோற்றுவிக்கப்படும் 50 உழவர் சந்தைகளில் மின்னணு எடைத்தராசு மற்றும் அதன் உபகரணங்கள் ரூ.1.45 கோடி செலவில் வழங்கப்பட்டு வருகிறது.

**3. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் விற்பனை அறக்கட்டளை அறிவுப்பீடம்**

தமிழ்நாடு மாநில வேளண்மை விற்பனை வாரியத்தின் மூலமாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக் கல்வி மையத்திற்கு ரூ.50 இலட்சம் வைப்பு நிதியாக அளித்து ஒரு அறக்கட்டளை அறிவுப்பீடம் ஏற்படுத்தியுள்ளது. இந்த நிதியிலிருந்து பெறப்படும் வட்டியின் மூலம் 29 ஆராய்ச்சி பணிகள் மற்றும் 19 பயிற்சிகளும் இத்துறையைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**4. விளம்பரம் மற்றும் பிரச்சாரம்**

தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம் தனது கட்டுப்பாட்டிலுள்ள சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளியிலுள்ள மையங்கள் மூலமாக வேளாண் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் வாயிலாக விற்பனை செய்வதால் கிடைக்கும் நன்மைகள் குறித்து விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகளைச் செய்து வருகிறது.

**5. விற்பனை மேம்பாட்டு நிதி**

தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம், விற்பனைக் குழுக்களின் மொத்த வருவாயில் 15 விழுக்காடு தொகையை பங்குத் தொகையாக பெறுகின்றது. இவ்வாறாகப் பெறப்படும் மொத்தத் தொகையில் 50 விழுக்காடு, சந்தை மேம்பாட்டு நிதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதிலிருந்து விற்பனை மேம்பாடுகளுக்கான விளம்பரம் மற்றும் பிரச்சாரம், பயிற்சி போன்றவை மேற் கொள்ளப்படுகின்றன.

**6. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தையறிவுத்திறம் மற்றும் வழிகாட்டுதல் குழு**

தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியத்தின் நிதி பங்களிப்புடன் ரூ.44 இலட்சத்தில் தமிழ் நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தையறிவுத் திறம் மற்றும் வழிகாட்டுதல் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இக்குழு, சர்வதேச சந்தையில் முக்கிய விளை பொருட்களுக்கான விலை விவரங்களைச் சேகரித்து, அவற்றை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் எதிர்கால ஏற்றுமதிக்கான விலையை முன்னறிவிப்பு செய்தல், ஏற்றுமதிக்கு உகந்த நாடுகளைக் கண்டறிதல் போன்ற பணிகளை மேற்கொள்கிறது. வெளிமாநில சந்தைகளின் விலை விவரம் மற்றும் விளைபொருட்களுக்கு எதிர் வரும் மாதங்களில் நிலவக் கூடிய விலை விவரங்களைக் கண்டறிந்து ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு முன்னறிவிப்பு செய்கிறது. விலை விவரங்களை அறிந்து விவசாயிகளுக்குத் தெரிவிப்பதன் மூலம், விவசாயிகள் தங்களுடைய விளைப் பொருட்களுக்கு நல்ல விலை பெறவும், பருவத்திற்கேற்ற பயிர்களைத் தேர்வு செய்யவும்,

அவர்களுடைய விளைபொருட்களைக் குறித்த நேரத்தில் விற்பனை செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், இக்குழு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனை தகவல் மையங்களுடன் இணையதளம் வாயிலாக இணைக்கப்பட்டு, விளைப்பொருட்களுக்கு நிலவும் விலை விவரங்களை விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் அறியும் வகையில் தெரிவிக்கிறது.

**தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு.**

தமிழகத்தில் சிறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் தொழில் நுட்பங்கள் மற்றும் மதிப்பூட்டுதல் முறைகளை கடைபிடிக்கச் செய்து அதன் மூலம் அவர்களுடைய விளைபொருட்களுக்கு நிரந்தர விற்பனையும், கூடுதல் விலையும் கிடைக்க அவர்களை ஈடுபடுத்தி செயல்படுவதே, தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் நட்பமைப்பின் நோக்கமாகும். இவ்வமைப்பு அரசு, தனியார் துறை, விவசாய கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சேவை நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது. இத்திட்டமானது, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், பாரத வங்கி, அதன் துணை வங்கிகள் உடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. தொழில் தொடங்க மூலதன முதலீட்டுத் தொகை மற்றம் திட்ட மேம்பாட்டு வசதிகள் வழங்குவதன் மூலமாக தமிழகத்தில் வேளாண் வணிகம் மேம்பாடு அடைகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூ.12,505.65 இலட்சங்கள் முதலீட்டுத் தொகையில் 27 வேளாண் வணிக நிறுவனங்களுக்கு தொழில் தொடங்குவதற்கான மூலதன முதலீட்டுத் தொகையாக ரூ.1136.48 இலட்சங்களுக்கு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.